

# ஒப்புரவாகுதலும் நம்பிக்கையும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** கொலோ 1:20–29; எபி 5:27; எபே 3:17; ரோமர் 8:18; எபே 1:7–10; 3:3–6; நீதி 14:12.

**மனன வசனம்:** நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரிந்தியர் 5:21.

கொலோ 1:20இல் வலியுறுத்தின ஒப்புரவாகுதல் கருத்தை (பாடம் 8, வியாழக்கிழமை), பவுல் தொடருகிறார். ஒப்புரவாகுதல்பற்றி அங்கு பிரபஞ்ச அளவில் பேசினார்; இங்கு தனிப்பட்ட அளவில் பேசுகிறார். இயேசு சிலுவையில் மரித்ததன்மூலம் சகல ஜீவிகளும் ஒப்புரவாகுவதைச் சாத்தியமாக்கினார். குறிப்பாக மனிதர்கள் பாவத்தினால் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராக இருந்தார்கள், இப்போது, விசுவாசத்தினால் அவருடன் ஒப்புரவாகிறார்கள்.

தனிநபருடைய ஒப்புரவாகுதலின் செயல்முறையை இந்த வாரம் விரிவாகப் பார்ப்போம். பிரபஞ்ச ஒப்புரவாகுதலைப்போல, தனிநபர் ஒப்புரவாகுதலும் கிறிஸ்துவின் மரணத்தினால்தான் நடக்கிறது. தனிப்பட்ட அனுபவத்தில், சிலுவை வெறும் அடையாளமாக அல்லாமல், தனிப்பட்ட அனுபவம் சம்பந்தப்பட்டதாக மாறுகிறது. மனிதர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, தேவ அன்பு அவர்களை மாற்றுகிறது.

தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்த 'இரகசியம்'பற்றி பவுல் பேசுகிறார். கொலோ 1:26. அந்த இரகசியம் என்ன? அதில் தனிநபருக்கும் பிரபஞ்சத்திற்கும் என்னவெல்லாம் அடங்கியிருக்கிறது? பவுல் மிகவும் உற்சாகத்துடன் அறிவித்த சுவிசேஷத்திற்கும் இந்த 'இரகசியத்திற்கும்' உள்ள தொடர்பு என்ன?

*2026, பெப்ரவரி 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# துர்க்கிரியைகளிலிருந்து ஒப்புரவாக்கினார்

**அந்நியராயிருந்தோம், சத்துருவாயிருந்தோம் என்று பவுல் எதைச் சுட்டிக்காட்டு கிறார்? கொலோ 1:21,22. கிறிஸ்துவின் மரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட இறுதி விளைவு என்ன? எபே 5:27.**

கிறிஸ்துவின் நீதிக்கு அப்பால், மனுக்குலத்தின் நிலை மிகவும் மோசமாக இருப்பதை பவுல் எப்போதும் மனதில் வைத்திருந்தார். இரண்டாயிரம் வருடங்கள் கடந்துவிட்டாலும்கூட அவரது கருத்து சரிதான் என்பதை ஒத்துக்கொள்ளாதவர் உண்டா? மனுக்குலத்தின் பாவநிலைகுறித்த கிறிஸ்தவ உபதேசத்தை ஒத்துக் கொள்ள விசுவாசம் அவசியமில்லை என்பார்கள்.

ஆனாலும் பாவம் நுழைந்ததுமுதல், நாம் மோசமானவர்களாக இருந்தாலும் கூட, நம்மை மீண்டும் தம்முடன் ஒப்புரவாக்குகிற முயற்சியை தேவன் மேற்கொண் டார். பாவத்திற்கான தீர்வு சிலுவை மரணமாக இருந்தாலும், அதற்கான நடவடிக்கை யில் ஆரம்பம்முதலே இறங்கினார்.

தம்முடைய மிகச்சிறந்த சிருஷ்டிப்பான ஆதாமிடம் ஏதேனில், ‘நீ எங்கே இருக்கிறாய்?’ என்று கேட்டார். ஆதி 3:9. இன்றும் தொலைந்துபோன ஒரே ஆட்டை, அதாவது நம்மைத் தொடர்ந்து தேடி வருகிறார். நம்மை ஒவ்வொருவராகத் தேடுகிறார். நம்மை அணுக அவரிடம் மிகச்சிறந்த திட்டம் இருக்கிறது; அது நமக் கும் சாத்தானுக்கும் பகையை ஏற்படுத்துவது; சுவிசேஷத்தை இரத்தினச் சுருக்க மாக உள்ளடக்கிய அந்த வாக்குறுதி ஆதி 3:15இல் உள்ளது.

சிலசமயம் சுவிசேஷத்திற்கு மிகவும் சிக்கலான, கருத்தியல்ரீதியான அர்த்தம் கூறுவதால், இருபத்தோராம் நூற்றாண்டு மக்களால் அதன் நடைமுறை பயனைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால், சுவிசேஷம் மிகமிக எளிமையானது. சு விசேஷத்தில் மூன்று பகுதிகள் உள்ளன:

முதலாவது, நாம் நம்மை நாமே காப்பாற்ற இயலாதவர்கள்; அதனால் இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார். ரோமர் 5:6-8. இரண்டாவது, அவர் நமக்காக மரித்தார் என்று விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும்போது, நீ திமான்களாக்கப்பட்டு, பாவத்தின் ஆக்கினையி லிருந்து விடுவிக்கப்படுகிறோம். ரோமர் 5:9-11; 6:6,7. மூன்றாவது, அதன்பிறகு கிறிஸ்துவுடன் இணைந்து வாழ ஆரம்பிக்கிறோம், அவரது மறுசிருஷ்டிப்பின் வல்லமையையும், நமக்குள் அவர் வாசம்பண்ணுவதையும் அனுபவிக்கிறோம். 2கொரி 5:17-21; கலா 2:20.

இவை தனித்தனியாக நிகழ்வதில்லை. இயேசுவை நம் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள ஆயத்தமானதுமே அனைத்தும் ஒரே நேரத்தில் நிகழமுடியும். ஒவ்வொரு நாள் காலையிலும் நம்மை அவரிடம் அர்ப்பணிக்கும்போது அவை புதுப்பிக்கப்படுகின்றன. கிறிஸ்துவின் இரட்சண்ய கிரியையை நாம் ஒவ்வொரு வரும் வெவ்வேறு அளவில் நம் வாழ்க்கையில் அனுபவித்திருக்கலாம், அதற்கு அடிப்படை இயேசு நமக்காக மரித்ததுதான். அதைத்தான் நாம் எப்போதுமே நோக்கிப் பார்க்கவேண்டும்.

**உங்களையும் உங்கள் குணத்தையும் உங்களது உள்ளான நிலையையும் பார்க்கும்போது, உங்களுக்கு சிலுவை அவசியப்படுவதுபற்றி அது என்ன சொல்லுகிறது?**

# விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால்

**விசுவாசத்தில் 'ஸ்திரமாயும் உறுதியாயும்' இருக்குமாறு பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? கொலோ 1:22; 2:5; எபே 3:17.**

---

கிரேக்க மொழியில் நான்கு வகை 'நிபந்தனைக் கூற்றுகள்' உள்ளன; அவற்றுக்கிடையே உள்ள வித்தியாசங்கள் நுணுக்கமானவை. கொலோ 1:22 இன் நிபந்தனைக் கூற்று, 'நிபந்தனை உண்மை'. அதாவது, கொலோசெய விசுவாசிகள் விசுவாசத்தில் தொடருவார்களென தான் நம்புவதாக பவுல் சொல்கிறார். அவர்களது விசுவாசத்தின் உறுதிக்கான ஆதாரத்தை தான் கண்டதாகச் சொல்கிறார். கொலோ 2:5. ஆனாலும் அவர்கள் கால்வைத்த விசுவாசப்பாதையில் தொடர்ந்து நிலைத்திருப்பதை பொறுத்தே நம்பிக்கையுண்டெனச் சொல்கிறார்.

நிலைத்திருத்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை பல இடங்களில் வருகிறது. கொலோ 1:23. விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயை என்ன செய்ய வேண்டுமென பரிசேயரும் வேதபாரகரும் இயேசுவிடம் **ஓயாமல்** கேட்டுக் கொண்டிருந்தார்கள். யோவான் 8:7. ரோதை எனும் பெண் பேதுருவின் சத்தத்தை அடையாளம் கண்டும், கதவைத் திறக்காமலேயே மற்றவர்களிடம் சொல்லும்படி உள்ளுக்குள் ஓடினபோது, பேதுரு **தொடர்ந்து** தட்டிக்கொண்டே நின்றார். அப் 12:16, சமகால மொழிபெயர்ப்பு. பவுலே இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார்; அதாவது, தான் போதித்த உபதேசத்திலும் நடைமுறை அறிவுரையிலும் **நிலைகொண்டிருக்குமாறு** தீமோத்தேயுவிடம் சொன்னார். 1தீமோ 4:16. இங்கும் அதே அர்த்தத்தில், ஆனால் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான விதத்தில் சொல்கிறார்.

அடுத்தவாரப் பாடத்தில் பார்க்க இருப்பதுபோல, சுவிசேஷம் அருளுகிற நம்பிக்கையில் நிலைத்திருப்பதைவிட மனித வழிகளை கொலோசெய விசுவாசிகள் தேடிப்போவார்களோ என்று பவுல் வருந்தினார். கொலோ 2:8,20-22. 'ஸ்திரம்' என்கிற வார்த்தை தேவ வார்த்தையின் அடிப்படையில் அன்பிலும் விசுவாசத்திலும் உறுதியான அடித்தளத்தைப் போடுவதைக் குறிக்கிறது. மத் 7:25; எபே 2:20; 3:17.

இந்தக் கருத்துடன் சம்பந்தப்பட்ட வார்த்தைதான் 'உறுதி; இது அசைக்க முடியாத கட்டமைப்பைக் குறிக்கிறது; எனவே அது, 'சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு' அசைக்கமுடியாத ஒரு கிறிஸ்தவனை சுட்டிக் காட்டலாம். கொலோ 1:22. அதே வார்த்தை 1கொரி 15:58இலும் பயன்படுத்தப்பட்டுள்ளது: 'நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.'

'ஒருமுறை இரட்சிப்பு, எப்போதும் இரட்சிப்பு' என்கிற பொதுவான நம்பிக்கைக்கு பவுல் எதிராக இருந்தது புரிகிறது.

---

**தொடர்ந்து விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியதின் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு அனுபவித்து வருகிறீர்கள்? அதாவது, அவ்வாறு செய்வதற்கு ஏன் தினமும் மனதாரத் தீர்மானிக்க வேண்டும்? தீர்மானிக்காவிட்டால், என்னவாகும்?**

# தேவனுடைய நித்திய திட்டம்

**கிறிஸ்துவின்நிமித்தம் தான் பாடுபடுவதுகுறித்து பவுல் என்ன சொல்கிறார்? கொலோ 1:24,26.**

---

கொலோசெயர் நிருபத்தை எழுதியபோது பவுல் ரோமில் வீட்டுச்சிறையில் இருந்தார். ஆனாலும் முன்புபோல வீடுவீடாக, இடம்இடமாகச் சென்று தீவிரமாக ஊழியம் செய்யமுடியவில்லை என்பதுதான் அவருக்கு மிகப்பெரிய உபத்திரவமாக இருந்தது. அப் 20:20. கிறிஸ்து முன்னுரைத்திருந்த இந்த உபத்திரவங்கள் அல்லது பாடுகள் 'இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல.' ரோமர் 8:18. இந்த இறுதிக்காட்சியை மறக்கவே கூடாது. பிலிப் பியருக்கு எழுதியதுபோல, கொலோசெயரிடமும் அவர்களுக்கு நன்மை உண் டாவதால், தன் உபத்திரவங்களின்நிமித்தம் சந்தோஷப்படுவதாகச் சொல்கிறார்.

பவுல் சிறையில் இருக்கலாம்; ஆனால் 'தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை.' 2தீமோ 2:9. பவுல் சிறைவைக்கப்பட்டிருந்த அந்த இடத்தில்தான் பிலிப்பியர், எபேசியர், பிலேமோன் நிருபங்களை எழுதினார். அவர் விடுதலையான பிறகு, 1தீமோத்தேயுவிலும் தீத்துவிலுமுள்ள முக்கிய ஆலோசனைகளை எழுத தேவன் அவரை ஏவினார். இறுதியாக அவர் ரோமச் சிறையில், அடைக்கப்பட்டிருந்த சமயத்தில் 2தீமோத்தேயுவை எழுதினார். இந்த இறுதி வருடங்களில்தான், புதிய ஏற்பாட்டின் குறிப்பிடத்தக்க பகுதியை எழுதுவதற்கு பவுலுக்கு வாய்ப்பு கிடைத்தது; எபிரெயர் நிருபமும் அதில் அடங்கும்.

தேவனுடைய நித்திய திட்டத்தில் இவை அனைத்தும், இன்னும் அதிகமும் அடங்கியிருந்தன. கொலோ 1:26இல், பவுல் பயன்படுத்துகிற 'உத்தியோகம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **ஒய்கோனோமியா.** இதற்கு குறிப்பிட்டு அர்த்தம் சொன்னால், 1தீமோ 1:3,4இல் உள்ளதைப்போல 'தேவனுடைய ஒழுங்கைச்' சுட்டிக்காட்டுகிறது. அதில் பவுலின் அப்போஸ்தலத்துவமும் அடங்கும். விரிவான அர்த்தம் என்னவென்றால், இரட்சிப்பின் திட்டத்தில் தேவன் செய்துள்ள அனைத்து ஏற்பாடுகளும் அடங்கும். பவுலும், பிற அப்போஸ்தலர்களும், மோசேயும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளும் செய்த ஊழியங்கள் எல்லாம் 'தேவவசனத்தைத் தெரியப்படுத்துவதற்குத்' திட்டமிடப்பட்டவை; இவை தெய்வீக திட்டத்துடன் தொடர்புடையவை. எபே 2:20; 3:6; கொலோ 1:25.

நாளைய ஆராய்ச்சியில் இந்தத் தலைப்பில் ஆழமாக ஆராய்வோம்; ஆனால் 'உலகத்தோற்றமுதல்' செயல்படுத்தப்பட்ட மகத்தான, விசாலமான தெய்வீக திட்டத்தில் தன் ஊழியம் ஒரு சிறு பகுதி என்பதை பவுல் உணர்ந்திருந்தார். மத் 13:35; எபே 1:4.

---

**உங்களுடைய வாழ்க்கையைப்பற்றி யோசியுங்கள். நீங்கள் போடுகிற சிறிய, பெரிய திட்டங்கள் எவ்வாறு தேவனுடைய பெரிய திட்டத்துடன் பொருந்துகின்றன? ஏதாவது தீர்மானத்தை 'சிறியது' என்று நாம் கணக்கிடமுடியுமா? அது பெரிய விளைவுகளை உண்டுபண்ணி, பின்னர்தான் நமக்குத் தெரிவதற்கு எவ்வாறு வாய்ப்பிருக்கிறது?**

# தேவ இரகசியம் வெளியாக்கப்பட்டது

**‘இரகசியம்’பற்றி இரண்டுமுறை பவுல் பேசுகிறார். கொலோ 1:25,27. அது என்ன இரகசியம்?**

---

1கொரி 2:7இல், ‘உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தின’ ‘இரகசியம்’ என்று பவுல் குறிப்பிடுகிறார். அது இரட்சிப்பின் திட்டத்தின்மூலம் வெளியாக்கப்பட்டது. இந்த உண்மையை அறிய தீர்க்கதரிசிகள் ஆவலாக இருந்ததாகவும், ‘இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்’ என்றும் பவுல் குறிப்பிடுகிறார். 1பேதுரு 1:10-12. இது ‘உலகத்தோற்றத்திற்கு முன்னே’ திட்டமிடப்பட்டது; ‘ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்தது.’ 1பேதுரு 1:20; ரோமர் 16:25. ஆனாலும், கிறிஸ்தவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல்மூலமாக இந்த இரகசியம் வெளியாக்கப்பட்டது. 2கொரி 3:14.

**தேவ இரகசியம்பற்றிப் பேசுகிற பின்வரும் வசனங்கள் எவ்வாறு இரட்சிப்பின் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டுகின்றன?**

**1. எபே 1:7-10**______________________________________

**2. எபே 3:3-6**______________________________________

இறுதியாக, பரலோகத்திலும் பூலோகத்திலும் இருக்கிற ‘சகலமும்’ கிறிஸ்துவுக்குள் ஒன்றாகக் கூட்டப்படும். இதுதான் யோவான் 17இல் கிறிஸ்து ஏறெடுத்த ஜெபத்தின் நோக்கம். இது எவ்வாறு சாத்தியமாகும் என்பது இரகசியமாக இருந்தது; இப்போது சுவிசேஷத்தின்மூலம் வெளியாக்கப்பட்டுள்ளது.

பரலோகத்தின் விலைமதிக்கமுடியாத பொக்கிஷமான இயேசுவை நம் இரட்சிப்புக்காகக் கொடுக்குமளவிற்கு தேவன் எதற்காக நம்மை நேசிக்க வேண்டும் என்பது நித்தியகாலம் முழுவதும் நம்முடைய ஆராய்ச்சியாக இருக்கும். ஆனால் ஒன்று நமக்குத் தெரியும்: ‘பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, (கிறிஸ்து) எல்லாருக்காகவும் மரித்தார்.’ 2கொரி 5:15. அதன் விளைவாக, கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற யூதர், புறஜாதியார் என அனைவரும், தேவனுடைய வாக்குறுதிகளுக்கு சுவிசேஷத்தின்மூலமாக சமஅளவில் உரிமைபெறுகிறார்கள்; ஒரே சரீரமாகிய சபையாக ஒன்றுகூட்டப்படுகிறார்கள்.

‘கிறிஸ்து உங்களுக்குள் இருப்பது’ என்பது விசுவாசத்தால் கிறிஸ்து இருதயத்தில் வாசம்பண்ணுவதைக் குறிக்கிறது. எபே 3:17; கலா 2:20. கிறிஸ்துவுடன் உள்ள இந்த ஆவிக்குரிய ஐக்கியம்தான் விசுவாசிகள் இப்போதே ‘உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும்’, ‘இனிவரும் உலகத்தின் பெலன்களை’ ருசிபார்க்கவும் அவர்களுக்குத் திறனளிக்கிறது. எபே 2:7; எபி 6:5. கிறிஸ்துவின் பிரசன்னம் நம் வாழ்வில் காணப்பட்டதுமே, அவர் நம்மை பரலோகத்துடன் இணைக்க ஆரம்பிக்கிறார். விசுவாசிகளின் இருதயங்களில் கிரியைசெய்கிற சுவிசேஷம்தான் ‘ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது.’ கொலோ 1:12.

# சுவிசேஷத்தின் வல்லமை

**பவுலின் கவனமெல்லாம் எதில் இருந்தது? கொலோ 1:28,29. 'எந்த மனுஷனும்' என்று மூன்றுமுறை வருவது ஏன்?**

கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கப்பதிலேயே பவுலின் நோக்கமிருந்தது. 1கொரி 1:23. கிறிஸ்துவினுடைய பலியின் நோக்கம், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக சபையை தமக்குமுன் நிறுத்திக்கொள்வதாகும். எனவே, 'எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு' பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். கொலோ 1:28. அதையே போதித்தார்; எச்சரித்தார். கிறிஸ்தவ உபதேசமாக, நடைமுறைக் கருத்துகளாகப் போதித்தார். 2தெச 2:15; 1தீமோ 4:11; 1தீமோ 5:7; தீத்து 1:9. சுவிசேஷத்தைப் புறக்கணிப்பதின் விளைவுகளையும், கள்ளப்போதகர்களால் உண்டாகிற ஆபத்துகளையும் எச்சரித்தார். அப் 20:29-31; ரோமர் 16:17.

வேத போதனைகளை ஏற்றுக்கொள்வதாலும், அதன் எச்சரிப்புகளுக்குச் செவிகொடுப்பதாலும் தேறின கிறிஸ்தவர்களாக மாறுகிறோம். தேறுதல் என்பது ஒரு முக்கியக் கருத்து. பிறந்த குழந்தை முதன்முதலாகப் பேசுவது, நடக்கப் பழகுவது, வாசிக்கப் பழகுவது என அதன் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் பெற்றோர் மகிழ்வார்கள். தங்கள் குழந்தை, பிறந்து பல வருடங்கள் கழித்தும் நடக்காமல் அல்லது பேசாமல் இருந்தால், பெற்றோர் எச்சரிக்கையடையாமல் இருப்பார்களா? வளர்ச்சியும் முன்னேற்றமும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று. கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அது பொருந்தும்.

'தேறின' என்பதற்கான கிரேக்க வார்த்தை **டெலியோஸ்**; பூரணமாக, குறைவின்றி இருப்பது என்று அர்த்தம். கிறிஸ்தவ வளர்ச்சியின் செயல்முறை, தேவ பிரமாணத்தின் ஆழத்தையும், அதன் நிபந்தனைகளின் 'மகா விஸ்தாரத்தையும்' உணரச்செய்கிறது. சங் 119:96. 'இருதயத்தின் நினைவுகளிலும் யோசனைகளிலும்' தாக்கத்தை உண்டாக்குகிறது. எபி 4:12.

ஆனால் நம்மை எச்சரிக்கவே 'புத்திசொல்லி' என்று பவுல் குறிப்பிடுகிறார். கொலோ 1:28. மனுஷனுக்கு 'செம்மையாய்த் தோன்றுகிற வழி மரண வழி.' நீதி 14:12. ஆவியின் வழிநடத்துதலால் தேவ வார்த்தையை ஆராய்கிறபோது, ஆவிக்குரிய பகுத்துணர்வு வருகிறது. கள்ளப்போதனைகளில் கொஞ்சம் உண்மை இருக்கும். ஆனால் வேதாகமம் சொல்வதுதவிர, சில சேர்க்கப்பட்டிருக்கும்; அல்லது எடுக்கப்பட்டிருக்கும். ஏசா 8:20. சிலர் தேவ வார்த்தையை சந்தேகிப்பதாக நேரடியாகச் சொல்லாமல், அது உண்மையில் சாத்தியமா அல்லது இன்றைக்கு பொருந்துமா என்கிற கேள்வியை எழுப்பி, தான் சொல்வதே சரியெனக் காட்டப் பார்க்கிறார்கள். நாம் ஞானமாக இருக்கவேண்டும். பொய் உபதேசத்தை இனம்காணவேண்டும்.

---

**'கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக' இருப்பது என்றால் என்ன அர்த்தம்? கொலோ 1:28. சிலுவையில் கிறிஸ்து நமக்காகச் செய்ததைப் புரிந்துகொள்வது, 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக' இருப்பதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?**

# மேலும் படிக்க:

'தேவனுடைய பரிசுத்த பிரமாணத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிற அளவுக்கு நம்மில் நீதி யேதும் இல்லை. ஆனாலும், தப்பிப்பதற்கான வழியை கிறிஸ்து நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். நீங்கள் உங்களை அவருக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் இரட்சகராக அவரை ஏற்றுக்கொண் டால், உங்கள் வாழ்க்கை எவ்வளவு பாவம் நிறைந்ததாக இருந்தாலும், அவர் நிமித்தமாக நீதி மான்களாக எண்ணப்படுவீர்கள். கிறிஸ்துவின் குணம் உங்களுடைய குணமாக எண்ணப் படும். நீங்கள் பாவம்செய்யாதவர்போல தேவனுக்குமுன்பாக ஏற்றுக்கொள்ளப்படுவீர்கள்.

'இதற்கும் மேலாக, கிறிஸ்து உங்கள் மனதை மாற்றுகிறார். விசுவாசத்தால் அவர் உங் கள் மனதில் வாசம்செய்கிறார். எப்போதும் உங்கள் சித்தத்தை அவரிடம் தத்தம்செய்து, இந்த உறவை நீங்கள் விசுவாசத்தால் காத்துக்கொள்ளவேண்டும். இதை நீங்கள் செய்யு மளவும், தமக்குப்பிரியமானபடி நீங்கள் செயல்பட, உங்களில் விருப்பத்தையும் செய்கையையும் உண்டாக்குவார்.

'ஆகவே, நாம் பெருமைபாராட்டுவற்கு நம்மிடம் ஒன்றுமில்லை. நம்மை நாமே உயர்த்த ஒரு காரணமும் இல்லை. கிறிஸ்துவின் நீதி நம் நீதியாக எண்ணப்படுகிறது; நம்மிலும் நம் மூலமாகவும் ஆவியானவர் கிரியைசெய்கிறார். இதுமட்டுமே நமக்குள்ள ஒரே நம்பிக்கை.'

'நம்மில் பலர் நம்மைவிட்டு வெளியேறி, மயக்குகிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுப்பார்கள் என்கிற வெளிச்சம் மிகத்தெளிவாக எனக்குக் காட்டப்பட்டது. சத்தியத்தை விசுவாசிப்பதாகச் சொல்கிற ஒவ்வோர் ஆத்துமாவும் சத்தியம் என்னவென்பதை அறிவுப்பூர்வமாக அறிந்திருக்க கர்த்தர் விரும்புகிறார்.'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *மனன வசனத்தை மீண்டும் வாசியுங்கள்: 'நாம் அவருக்குள் தேவனுடைய நீதி யாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.' 2கொரி 5:21. இதன் அர்த்தம் என்ன? கிறிஸ்து நமக்காகப் பாவமானார் என்றால் என்ன? நமக்குக் கிடைக்கவேண்டிய தண்டனை இன்னொருவருக்குக் கிடைத்ததைப் புரிந்துகொள்ள சிலுவை எவ்வாறு உதவுகிறது? மேலும், 'அவருக்குள் தேவ னுடைய நீதியாகும்படிக்கு' என்பதின் அர்த்தம் என்ன?*

2 *'ஒருமுறை இரட்சிப்பு எப்போதும் இரட்சிப்பு' என்று பல கிறிஸ்தவர்கள் நம்பு கிறார்கள். அதன் அர்த்தம்பற்றித் தியானியுங்கள். இது ஒரு தவறான உபதேசமென நாம் நம்புவது ஏன்? இதை நம்புகிறவர் எப்படிப்பட்ட ஆபத்துகளில் சிக்குகிறார்? அந்த உபதேசத்தை மறுக்கிற நாம்கூட எவ்வாறு இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறமுடியும்?*

3 *உங்கள் விசுவாசத்தில் எவ்வளவு தூரம் 'ஸ்திரமாயும் உறுதியாயும்' இருக்கிறீர்கள்? கொலோ 1:23. நீங்கள் விசுவாசிப்பதையும், அதற்கான காரணத்தையும் எவ்வளவு தூரம் நன்றாக அறிந்திருக்கிறீர்கள்? நீங்கள் விசுவாசிப்பதை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்ள என்ன செய்யலாம்? அந்த விசுவாசத்தில் 'ஸ்திரமாயும் உறுதியாயும்' இருப்பது ஏன் முக்கியமானது?*

# வார இறுதி நாட்களை மாற்றுதல்

செவந்த்–டே அட்வென்டிஸ்ட் விசுவாசத்தின்நிமித்தம் இரண்டு வேலைகளை இழந்த பிறகு, தேவனிடம் ஜெபித்தார் ரெனே. ‘ஆண்டவரே, பணக்காரர்கள்மட்டுமே அட்வென்டிஸ்டு களாக இருக்கமுடியும்போலத் தோன்றுகிறது. சனிக்கிழமைகளில் விடுமுறையுடன் எனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. நாங்கள் எவ்வாறு பிழைக்கமுடியும்?’ என்று ஜெபித்தார்.

பல்கலைக்கழக படிப்பைப் படித்திருந்தாலும், கட்டுமான கூலி வேலைக்குச் சென்றார். ஆனால் சிறு பிள்ளைகள் இருந்த அவருடைய குடும்பத்திற்கு வருமானம் போதுமானதாக இல்லை. அப்போதுதான் மத்தியக்கிழக்கில் கணக்கர் வேலைக்கு ஆள் தேவையென ஒரு விளம்பரத்தைப் பார்த்தார். அங்கு சென்றால், குடும்பத்தை பிலிப்பைன்ஸில் விடவேண்டிய திருக்கும். அந்த வேலைக்கு விண்ணப்பித்தார், வேலை கிடைத்தது. அது சவாலான காலக்கட்டமாக இருந்தது.

மத்தியக்கிழக்கிற்குச் சென்ற பிறகுதான், அங்கு வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழ மையும் வார விடுமுறை நாட்கள் என்பதை அறிந்தார். அப்படியானால், சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலைசெய்ய வேண்டும்.

ரெனே சனிக்கிழமைகளில் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியதிருந்தாலும், அவ ருக்கு வேலை இருக்காது. வேதாமகத்தையும் எலன் ஒய்ட் எழுத்துகளையும் வாசிப்பார். ரெனேயின் முதலாளி சனிக்கிழமை இரவு சமயங்களில்தான் வருவார், அதனால் பகலில் அவருக்கு வேலை இருக்காது. ஆனாலும் ரெனேவுக்கு உறுத்துதலாக இருந்தது. ஓய்வு நாளில் அலுவலகத்திற்குச் செல்லவேண்டியது இருந்ததே! தன் விசுவாசத்தில் சமரசம் செய் வதாக உணர்ந்தார், ஓய்வுநாளில் ஆலயத்திற்குச் செல்ல ஆசையாக இருந்தது. ‘தேவனே, சனிக்கிழமையில் ஆலயத்திற்குச் செல்வதற்கு நீர் எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால, நான் மரிக்கும்மட்டும் ஓய்வுநாளை பரிசுத்தமாகக் கைக்கொள்வேன்’ என்று ஜெபித்தார். இரண்டு வருடங்களாக இவ்வாறு ஜெபித்து வந்தார். பிறகு தன் முதலாளியிடம் பேசினார்.

“நான் ஓய்வுநாளில் ஓய்ந்திருப்பதற்கு சனிக்கிழமைகளில் விடுமுறை வேண்டும்” என்று கேட்டார். “இல்லை, என்னால் தரமுடியாது. என்னுடைய ராஜா வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் வார விடுமுறை நாட்கள் என்று அறிவித்தால், நீங்கள் தாராளமாக ஓய்ந் திருக்கலாம்” என்று சொன்னார். உடனே ரெனே, ‘தேவனே, என் முதலாளி சொன்னதைக் கேட்டீரல்லவா, எனக்கு உதவமுடியுமா?’ என்று ஜெபித்தார்.

மூன்று மாதங்கள் கழித்து, ரெனேவின் முதலாளி ஐரோப்பாவில் இருந்தபோது, வார இறுதி விடுமுறை நாட்கள் வெள்ளி மற்றும் சனிக்கிழமைக்கு மாறுவதாக ராஜா சட்டம்போட் டார். அதற்காக தொடர்ந்து ஜெபித்து வந்த ரெனே, ராஜாவின் சட்டம்குறித்த செய்தியைக் கேள்விப்படாமல், எப்போதும்போல சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்திற்குச் சென்றார். அலுவலகத்தில் உட்கார்ந்த பிறகு, அவருடைய முதலாளி அனுப்பின மின்னஞ்ச



லைப் பார்த்தார். ‘ரெனே, என் ராஜாவிடமிருந்து செய்தி வந்திருக்கிறது. வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும்தான் வார இறுதி நாட்கள் என்று என் ராஜா அறிவித்தால், உனக்கு விடுமுறை தருவதாக நான் சொன்னதை மறக்கவில்லை’ என்று எழுதியிருந்தார். ரெனே உடனே அலுவலகத்தை மூடிவிட்டு, ஆலயத்திற்குச் சென்றார். அதிகளவு மகிழ்ச்சியாக இருந்த தால், அழுதார்.